Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி தை 29 ஆம் நாள் ஷவ்வால் பிறை 8 (11-2-65) வியாழக்கிழமை இதழ்

**ஈழநாடு**

**சந்தா விபரம்**

இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

பல இடங்களில் பொலிஸார் தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

# துப்பாக்கிச் சூட்டுக்கு நான்கு மாணவர் பலி!

## தமிழ்நாட்டில் பதட்டநிலைமை; ஹிந்தி எதிர்ப்பு வலுவடைகிறது

### இராணுவத்தினருக்கு உஷார் உத்தரவு வழங்கப்பட்டது

சென்னை, பெப் 10

மாணவர்களின் ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் பதட்டமான நிலைமை ஏற்பட்டுள்ளது ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் மீது இன்று பொலிஸார் பல தடவைகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர். பொலிஸாரின் குண்டுகளுக்கு இன்று நான்கு மாணவர்கள் பலியாகியுள்ளனர் பல மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

கோயம்புத்தூருக்கு 30 மைல் தூரத்தில் திருப்பூர் என்ற இடத்தில்இன்று இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர் கோஷ்டி மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மாணவர் இருவர் மாண்டனர். கோயம்புத்தூரிலிருந்து 60 மைல் தூரத்தில் வெள்ளக் கோயில் என்ற இடத்தில் தபால் காரியாலயத்திற்குள் புகுந்து தஸ்தாவேஜுகளை நாசமாக்கவும் இந்திப் பெயர்ப்பலகையை அகற்றவும் முயன்ற இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்செய்த மாணவர்களைக் கலைக்கவும் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் மூவர் காயமடைந்தனர்.

இந்தி ஆட்சிமொழியாவதை எதிர்த்தும் ஆங்கிலம் தொடர்பு மொழியாக நீடிக்குமென்றும் பிரதமரும்முதன்மந்திரியும் அளித்த வாக்குறுதி அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதன் மூலம் நிறைவேற்றப்படுமென அரசாங்கம் வாக்குறுதியளிக்க வேண்டுமெனக் கோரியும் தமிழ்நாட்டில் மாணவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்துவருகின்றனர்.

இன்று தமிழ்நாட்டில் மேலும் பல இடங்களில் மாணவர்களின் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**பலாத்கார சம்பவங்கள்**

இன்றைய ஆர்ப்பாட்டத்தில் மூன்று இடங்களில் மாணவர் வன்முறைச் செயலில் இறங்கினர். கோயம்புத்தூரிலிருந்து 30 மைல் தூரத்தில் திருப்பூர் என்னுமிடத்தில் ஆர்ப்பாட்டம்செய்த மாணவர் பொலிசார் மீது கற்களைவீசியதுடன் கட்டுக்கடங்காமல் வன்முறைச் செயல்களில் அவர்கள் ஈடுபட முயன்றதாகவும் இதைத் தொடர்ந்து பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. பொலிசாரின் துப்பாக்கிப்பிரயோகத்தில் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களில்இருவர் மாண்டனர். மற்றும் சிலர் காயமடைந்தனர்.

**தபால் நிலையத்துள் புக முயன்றனர்**

கோயம்புத்தூரிலிருந்து 60 மைல் தூரத்திலுள்ளவெள்ளக்கோயில் என்ற இடத்தில் தபால் நிலையம் ஒன்றினுள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைந்து தஸ்தாவேஜுகளை அழிக்க முயன்றதுடன் இந்திப் பெயர்ப்பலகையையும் அகற்ற முயன்றனராம். ஆர்ப்பாட்டக்காரரைக் கலைந்து போகுமாறு பொலிசார் எச்சரிக்கை விடுத்தும் அவர்கள் தொடர்ந்து வன்முறைச் செயலில் ஈடுபட்டதால் அவர்களைக் கலைக்க பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்தது என்று அறிவிக்கப்படுகிறது இத்துப்பாக்கிப் பிரயோகத்தில் மூவர் காயமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

திருப்பூரில் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள், பொலிஸ் ஜீப்வண்டிகளையும் பொலீஸ் வான்களையும் தீக்கிரையாக்கியுள்ளனர். காஞ்சிபுரத்தில் புகையிரதப் பெட்டிகளுக்கு மாணவர்கள் தீ வைத்தனர். சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புகையிரதமொன்றை மாணவர்கள் நிறுத்தி, புகையிரத என்ஜின் சாரதியையும் 'காட்'டையும் தாக்கி ரயில் பெட்டிகளிலுள்ள ஆசனங்களை எடுத்துச் சென்று எரித்தனர்

**இருவர் பலி**

திருச்செந்தூரில் இன்று பிற்பகல் மாணவர்கள்மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் ஸ்தலத்தில் மாண்டனர் பலர் காயமடைந்தனர்

**தயார் நிலையில் ராணுவத்தினர்**

மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களைச் சமாளிப்பதற்கு உஷார் நிலையில் இருக்கும்படி ராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் ராணுவத்தினர் தயாராகவிருக்கிறார்கள் என்றும் அழைக்கப்படும்பொழுது அவர்கள் நடவடிக்கையில் இறங்குவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

**சேலம் ஜில்லாவில் சம்பவம்**

சேலம் ஜில்லாவில் ஓர் இடத்தில் இந்தி எதிர்ப்பு ஆர் [illegible]

நகரசபை சீன குடியரசின்

**சித்திர தீப கண்காட்சி**

கடைசி தினம்

இடம்: யாழ் நகர மண்டபம்

நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 10 மணி வரை

பிரவேசம் இலவசம்

இலங்கை சீன நட்புறவுச் சங்கம்

## சூறாவளியினால் கடலில் ஆழ்ந்த மீன்பிடிபடகுகள்

நல்லூர், வியாழன்

சூறாவளிக்காற்றின் போது கடலில் ஆழ்ந்த படகுகளை மீட்பதற்கான நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். கடலிற் தாண்ட வள்ளங்களை மீட்பதற்கான சகல நடவடிக்கைகளையும்மேற்கொள்ளும்படி அரசாங்க அதிபர் திரு. என். டி. ஐபவீரா காரைநகர் கடற்படைத் தளபதியிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் திகதி ஏற்பட்ட சூறாவளிக் காற்றின்போது கடலில் மீன் பிடிக்கச்சென்ற வள்ளங்கள் கடலிலேயே சிக்கின. இவற்றை மீட்டுத்தரும்படி மயிலிட்டி பலாலி மீனவர்கள் வலி-வடக்கு காரியாதிகாரிமூலம் அரசாங்க அதிபரிடம் முறையிட்டதனைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடபகுதி அரசாங்க அதிபர் திரு. கெவில் ஐபவீரா காரைநகர் கடற்படையினரிடம் இது விஷயமாக உதவி கோரியுள்ளார். மீனவர்கள் உத்தேசமாக வள்ளங்கள் தாண்டிருக்கக்கூடும் எனக் காண்பிக்கப்படும் இடத்தில் சுழியோடிப் பார்ப்பதற்கான நடவடிக்கைகளில் காரைநகர் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து கடலிற் சுழியோடுவதில் தேர்ச்சி பெற்ற கடற்படை வீரர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். கடலில் வள்ளங்கள் தாண்டிருக்கக்கூடிய இடத்தைக்குறிப்பாகக் காட்டக் கூடியவர்களின் உதவி கோரப்பட்டுள்ளது. வள்ளங்கள் தாண்ட இடத்தைக் காட்ட முடியும் என எண்ணும் மீனவர்கள் காரியாதிகாரிமூலம் கடற்படையினருடன் தொடர்பு கொள்ளலாமென அறிவிப்படுகிறது.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

பரந்தன் இரணைமடு மேற்கு ப. நோ. கூ. சங்கத்திற்கு இரு கொட்டில்கள் கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்தும் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை எனது அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். இரு கட்டிடங்களுக்கும் தனித்தனி கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "கொட்டகைக்கான கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும் யாழ்ப்பாணக்கூட்டுறவு மாகாண வங்கியின் பரந்தன் கிளையின் ஒவ்வொரு கட்டிடத்துக்கு ரூபா 50-00 கேள்விப்பத்திர வைப்புப் பணமாகக் கட்டப்பெற்ற பற்றுச்சீட்டு காண்பிப்பதன்பேரில், பரந்தன் தென் யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி காலை 10 மணிவரையும் கேள்விப்பத்திரப்படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் அனுப்பப்படல் வேண்டும். கட்டிடங்களின் மாதிரிப் படத்தையும், செலவின விபரத்தையும், எனது அலுவலகத்தில் பார்வையிடலாம் இவ்வேலையை ஏற்றுக் கொள்ளத் தகுதியுடையவர்கள் என்பதற்குப் போதிய அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கே தெரிவு செய்யப்பெற்ற பத்திரங்கள் வழங்கப்படும். தெரிவு செய்யப்பெற்ற கேள்விப்பத்திரக்காரர் தாம் ஒப்புக்கொண்ட ஒப்பந்தத் தொகையில் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கட்ட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பெற்ற இரண்டு வாரங்களுக்குள் வேலையை ஏற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களை தென்-யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டுறவு அலுவலகம், பரந்தன். 5-2-65.

(ஒப்பம்) மு. சின்னத்தம்பி, தென்-யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

16-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தங்கள் மானத்தைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக தங்களையே, தங்கள் உடைமைகள் எல்லாவற்றையுமே தியாகஞ் செய்துவிடவும் தயாராக இல்லாத மக்களுக்கு சுயதேசமோ, சுயராஜ்யமோ இல்லை;

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு தை மீ 29 உ. (11-2-65)


## ஏழாவது ஆண்டு

"'ஈழநாடு' சுடச்சுட செய்திகளைத் தருகின்றது. அது மட்டுமல்ல; ஈழத்தமிழ் மக்களின் சுகதுக்கங்களிலே நேர்முகமாகப் பங்குகொண்டு அவர்களுடன் இரண்டறக் கலந்து பெரும் பணிசெய்து வருகின்றது. சூறவளி கஷ்ட நிவாரணநிதியை ஆரம்பித்து பணம் திரட்டி, அதனை வீடு வீடாகச் சென்று, துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதல் கூறி விநியோகிப்பது மேலான தோர் மக்கள் பணியாகும் இவ்வித கைங்கரியத்தை வேறு எந்தப் பத்திரிகை ஸ்தாபனமும் செய்யவில்லை. ஈழத்திருநாட்டுக்கு ஒரு வரப்பிரசாதம் போன்ற இந்த ஸ்தாபனம் நீடூழி வாழ்க. இவ்வித பணிகளை மேன்மேலும் செய்ய எல்லாம்வல்ல இறைவனை இரைஞ்சுகின்றோம். இத்துடன் இந்த நிதிக்கு எங்களால் ஆன தொகைகளை அனுப்பியுள்ளோம். தயவுசெய்து எங்கள் பெயரைவெளியிடவேண்டாம்."

இவ்விதமான பல கடிதங்கள் நமக்குப் பல அன்பர்களிடமிருந்தும் சமீப நாட்களில் கிடைத்துவருகின்றன. இன்று 'ஈழநாடு' க்கு ஆறு ஆண்டுகள் நிறைந்து ஏழாவது ஆண்டு பிறக்கும் இச்சமயத்தில் பல்லாயிரக்கணக்கான அன்பர்களின் ஆமோகமான அபிமானமும் ஆதரவும் கிடைக்க முடிந்துள்ளதை ஒரு பெரிய பாக்கியமாகவே கருதுகின்றோம். எதிர்காலத்தில் மேன்மேலும் இவ்வித பணிகளைச்செய்ய இவை நமக்குப் புதிய ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாகவுள்ளன. கட்சி முதலிய எவ்வித சார்புமின்றி பொதுமக்களின் பணியையே தெய்வப் பணியாக மதித்து, மக்களின் குறைகளையும் கஷ்டங்களையும் அம்பலப்படுத்தி அவற்றை நீக்க முயற்சிப்பதும், இழந்துள்ள உரிமைகளை தமிழ்மக்கள் மீண்டும் பெறவும், தமிழர் இந்நாட்டிலே சரிநிகர் சமானமாக மானத்துடன் பயமின்றி வாழவும், நாட்டிலே சமூகஒற்றுமை நிலவி, நாடு முன்னேறச்செய்ய வேண்டுமென்பதும் இலங்கை-இந்திய நட்புறவை வலுப்படுத்தவும், உலகம் ஒரு குடும்பம் போல் வாழ்ந்து, உலகிலே அமைதியும் சுபிட்சமும் நிலவ இலங்கை தன்பங்கைச் செய்யவும்வேண்டுமென்பதுமே 'ஈழநாடு' பத்திரிகையின்குறிக்கோளாகும்.

இந்தக் குறிக்கோள் மிக மேலானதெனினும் 'ஈழநாடு' பத்திரிகையோ மிகச் சிறியதுதான். மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதென்று வசனமுண்டு. இப்பத்திரிகை ஆரம்பித்து ஆறே வருடங்களாயினும் செய்திகளை உடனுக்குடன் அளிப்பதிலும் எந்தப்பக்கமும் சாயாமல் நடுநிலையில் நின்று நியாயத்துக்கு விருப்பு வெறுப்பு இன்றி போராடுவதிலும் தெய்வ நம்பிக்கையை வளர்ப்பதுடன் பல்வேறு சமயங்களிடையே சமரசத்தை ஏற்படுத்துவதிலும் பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற முடிந்துள்ளதைப்பற்றிப் பெருமை கொள்கின்றோம். அபிவிருத்திக்கு இன்னும் எவ்வளவோ இடமுண்டு. எதிர்காலத்தில் பொதுமக்களின் ஆதரவை மேலும் பெற்று மக்களின் சேவைக்கான ஒரு புனிதஸ்தாபனமாக 'ஈழநாடு' பொலிய எல்லாம் வல்ல திருவருளை வேண்டுகின்றோம்.

## நிவாரண வேலைக்கு நிதி இல்லை

பம்பலப்பிட்டி, புதன் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு நிவாரண உதவி வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி தீர்ந்துபோய்விட்டதால் சமூகசேவை இலாகா தொடர்ந்து நிதி உதவி வழங்க முடியாதநிலையிலிருக்கிறது.

தொடர்ந்து நிவாரணவேலைகளைச் செய்வதற்காக இலாகா அரசாங்கத்திடமிருந்து நிதியை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பெட்ரோல் வழங்க மறுப்பு

பம்பலப்பிட்டி, புதன் தீவுப்பகுதியின் சகல பகுதிகளிலுமுள்ள பெட்ரோல் விநியோகஸ்தர்கள் அரசாங்க வாகனங்களுக்கு இலாகாக்கள வழங்கும் வவுச்சர்களுக்கு பெட்ரோல் விநியோகிக்க மறுப்பு தெரிவிப்பதாக அறியப்படுகிறது.

மேற்படி இலாகாக்கள் பணம் செலுத்துவதில் தாமதிப்பதாலேயே இவ்வாறு அந்த விநியோகஸ்தர்கள் மறுப்புத் தெரிவிக்குள்ளார்களாம்.

## திருப்பூரில் போலிஸ்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டம் செய்த மாணவர்கள் பொலிஸ் நிலையம் ஒன்றினுள் புக முயன்றதாகவும் பொலிசாரின் துப்பாக்கிகளைக் கடத்த நோக்கம் கொண்டிருந்ததாகவும் இதனால் அவர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டி நேரிட்டதாகவும் கூறப்படுகிறது. துப்பாக்கிப் பிரயோகத்தில் எவரும் மாண்டதாகத் தெரியவில்லை.

### மாணவர்மீது தடியடி

கோயம்புத்தூர் நகரிலும் மாணவர்கள் இன்று இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டக்கார பொலிசார்மீதும் கட்டிடங்கள் மீதும் கல் வீசினர் என்றும் சில பொலிசார் காயமடைந்தனரென்றும் அறிவிக்கப்படுகிறது. பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ததில் ஐந்து மாணவர் காயமடைந்தனர்.

### மதுரையில் ஆர்ப்பாட்டம்

மதுரையில் இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களைக் கலைப்பதற்காக பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்.

### சென்னை நகரில் 59 மாணவர் கைது

சென்னை நகரில இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்செய்த மாணவர்கள் அரசாங்க 'பஸ்' வண்டிபொன்றுக்கு இன்று தீ வைத்தனர். நகரில் இன்று 59 மாணவர் கைதுசெய்யப்பட்டனர்.

## 'கைத்தொழில் நல்வாழ்வளிக்கும்'

உடுப்பிட்டி, புதன் "நமது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமானால் குடிசைக்கைத்தொழில், விவசாயம் போன்ற துறைகளில் ஈடுபட்டு உழைக்க வேண்டும்" என கரவெட்டி மேற்கு மத்தொனி-உச்சில் ஸ்ரீ முருகானந்தா பலநோக்கு கூட்டுறவுச்சங்க நிர்வாகசபைக் கூட்டத்துக்கு தலைமை வகித்த கூட்டுறவுப் பரிசோதகர் திரு. ஐயாத்துரை குறிப்பிட்டார்.

திரு ஐயாத்துரை மேலும் பேசுகையில் கூறியதாவது:

படித்துவிட்டு வேலையின்றி இருப்போருக்கும் மற்றையோருக்கும் குடிசைக் கைத்தொழில் நல்வாழ்வளிக்கும் இதற்கு அரசாங்கம் உதவி செய்யும்

இன்று கிராமங்களில் சட்டவிரோதமாக சாராயம் தயாரிப்பதில் அதிகமானோர் ஈடுபட்டு ஒழுக்கக்கேட்டுக்கு வித்திடுகிறார்கள் இது மிகவும் கவலைதரத்தக்கது. இதை விடுத்து நல்ல துறையில் ஈடுபட்டு நமக்கும் நாட்டுக்கும் நன்மை தேடிக்கொள்ளவேண்டும்

மேற்படி சங்கக் காரியதரிசி திரு. கே. வல்லிபுரம், திரு. வி ஆழ்வாப்பிள்ளை ஆகியோர் சில குறைகளை எடுத்துக் காட்டினர்.

## "பணிகளில் சிறந்தது ஆலயத் திருப்பணி"

உரும்பிராய், புதன் "நமது ஆலயங்கள் புனிதமானவை. ஆலயங்களில் உள்ள திருப்பணிகளைச் செய்யக் கிடைப்பதே ஒரு பெரும் பாக்கியம்" என்று உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோவில் தோக கொட்டகைத் திருப்பணிக்கென நடைபெற்ற கலைவிழவை ஆரம்பித்து வைத்துப் பேசிய கண்டி மராமத்து இலாகா ஓவர்சியர் திரு வே த. செல்லத்துரை கூறினர்.

சைவபரிபாலனசபைக் காரியதரிசியும் வழக்கறிஞருமான திரு. ஆ தனபாலசிங்கம் இக்கலைவிழாவுக்குத் தலைமை வகித்தார். அநுராதபுரம் வித்தியாகந்தோர் கணக்காளர் திரு மு. பசுபதி வரவேற்புரை நிகழ்த்தினர்.

திருமதி வே த செல்வத்துரை திருப்பணி நன்கொடையாக 2001 ரூபா நிதியுதவி வழங்கினர்.

திரு. அங்கப்பா கோஷ்டியாரின் நாதஸ்வர இசையும், திருமதி தையல்சுந்தரம், பரந்தாமனின் இன்னிசைவிருந்தும் கோக்குவில் கலைபவன மாணவிகளின் குறிஞ்சிக்குமரன் நாட்டியநிகழ்ச்சியும், இலங்கை வானொலி நாடகத்துறைத் தலைவர் திரு. சண்முகநாதன் (சானா) கோஷ்டியாரின் மத்தாப்பு நிகழ்ச்சியும் இக்கலைவிழாவில் இடம்பெறறன. சக்கடத்தாராக ராஜ் தோன்றினா.

## யாழ்ப்பாணம் வரும் இந்திய நடனக்கோஷ்டி

27நாட்டியகாரர்களைக்கொண்ட உலகப் பிரசித்தி பெற்ற வட இந்திய நாட்டியக் கோஷ்டி ஒன்று சென்ற வாரம் ஸ்ரீ பிறிஜ்மோகன்மகாராஜ்தலைமையில் ஆலங்கைவந்துசேர்ந்தது மணிப்புரி, கதக் நடனங்கள், பாரதநாட்டுக் கிராமியப்பாடல்கள் சங்கீதம் முதலியவற்றில் புகழ் பெற்ற இக்கோஷ்டியினர் கைத்தொழில்பொருட்காட்சி நடைபெறும் இடத்திலும் யாழ்ப்பாணம், கண்டி காலி, ஆகிய இடங்களிலும் நிகழ்ச்சிகள் நடத்துவர்.

கதக்-மணிப்புரி நடனங்களில் விருந்தளிக்க இக் கோஷ்டியுடன் வந்திருப்பவர்கள் புதுமுறையிலும், பொருள் விளங்கக் கூடிய வகையிலும் நாட்டியமாடுவதில் உலகபபிரசித்தி பெற்ற விற்பன்னர்கள்.

இந்திய சங்கீதத்தின் உறைவிடம் சமய புராண வரலாற்றில் பின்னிப் பிணைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அத்துடன் சங்கீதம் இந்தியாவில் தோன்றி இன்று 2000 வருடங்கள் ஆகின்றன. சங்கீதத்தில் இராகமும் தாளமும் மிகவும் இன்றியமையாத அம்சங்களாகும்.

ஆனல் இந்திய நாட்டியத்தைப் பொறுத்த வரையில் அதனை மூன்று பிரிவாக பிரிக்கலாம். ஒன்றைப் பழங்குடி நடனமெனவும், எஞ்சிய இரண்டையும் கிராமிய, கர்நாடக நடனங்களெனவும் கூறலாம். இந்திய கர்நாடக சங்கீதத்திலும் நாட்டியத்திலும் குறிப்பிடத்தக்க அம்சம் தாளமுறையே தாளம்தான் ஒரு நாட்டியத்தை சிறப்பாக அமையச் செய்கிறது.

மணிப்புரி நடனத்தின் தொன்மை புராணங்களில் காணப்படுகின்றன. ஆனல் அதன் ஆதாரம் கிராமிய நடனத்திலேயே முழுமையாக அமைந்திருக்கின்றது. இந்த மணிப்புரி நடனங்கள் பொதுவாக வசந்தகாலத்திலும் திருவிழாக் காலங்களிலுமே அரங்கேற்றப்படும் மணிப்புரி நடனங்கள் மென்மையாகவும் கவர்சிகாமானதுமாகவும் இருக்கும் எந்பொழுதும் இயற்கை எழிலுடன் அமைந்த அம்சங்களையே மணிப்புரி நடனம் பிரதிபலிக்கும்.

கதக் நடனம் வட இந்தியாவையே பிறப்பிடமாகக் கொண்டது. இந் நடனத்தில் இந்து, இஸ்லாமிய கலாச்சாரங்கள் கலந்திருக்கின்றன. இந்தியாவில் மொகலாய சாம்பிராஜ்ய ஆட்சியின்போது கதக் நடனங்கள் ராஜசபைகளில் நடாத்தப்பட்டு உற்சாகம் ஊட்டப்பட்டு வந்தார், இப்படி பல சிறந்த அம்சங்களை உள் அடக்கியதும் உலக பிரசித்திபெற்றதுமான வட இந்திய நாட்டியக்கோஷ்டியினர் யாழ்ப்பாணத்திலும் ரசிகர்கள் கண்டு களிப்பதற்காக ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கின்றனர். இதனை யாழ்ப்பாண ரசிகர்கள் பெரிதும் பயன்படுத்திக் கொள்வார்கள் என எண்ண இடமுண்டு.

## குளோரின் ஏற்றுமதி

யாழ்ப்பாணம், வியாழன் பரந்தன் ரசாயன கூட்டு ஸ்தாபனம் 100 டன் குளோரின் [illegible] செய்யவிருக்கிறது.

## யாழ்ப்பாணத்தில் அமெரிக்க கலாசார நிலையம்

யாழ்ப்பாணம், வியாழன் இலங்கை அமெரிக்க சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் ஆதரவில் வரும் சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு இலங்கை அமெரிக்க கலாசார நிலையமொன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கிறது. அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தைச் சேர்ந்த திரு. கில்பேர்ட் எப்- [illegible] இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்ளவிருக்கிறார். திரைப்படக் காட்சியும் இடம்பெறவிருக்கிறது.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## கவனிப்பார்களா?

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த இராமநாதபுரம் உபதபாற்கந்தோருக்கு வரும் பார்சல் யாவும் உடைத்தும் கிளித்தும் வருகின்றது. இதுபற்றி இப்பகுதி கந்தோர் அதிபரிடம் முறையிட்டபோது அதற்கு தான் ஒன்றும் சொல்லமுடியாது என கூறியுள்ளார். இது விஷயம்பற்றி இப்பகுதி மக்கள் கவலையடைகின்றனர். கிளிநொச்சியில் இருந்து இராமநாத புரமாகிய இப் பகுதிக்கு சயிக்கிள் மூலமே தபால்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவசரக் தந்திகள் வந்தால் மறுநாள்தான் இப்பகுதி மக்களுக்குக் கிடைக்கின்றன. மனைவி மக்கள் இறந்தாலும் அவர்களின் மையத்தையே தந்தி கிடைத்தபின் போய்க் காணமுடியாத அவலநிலைக்கு இப்பகுதி மக்கள் இலக்காகியுள்ளார்கள். இது பற்றி தபாற்பகுதி மேலதிகாரிகள் உடன் கவனம் செலுத்துவார்களா?

ஆ. திருநாவுக்கரசு

இராமநாதபுரம், கிளிநொச்சி.

## பிரயாணிகள் கஷ்டம்

பளையிலிருந்து காலை 6 மணிக்குப் புறப்பட்டு யாழ்ப்பாணம் செல்லும் பஸ் சேவை நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால் எழுதுமட்டுவாள், ஒட்டுவெளி, கரம்பகம் மிருசுவில் முதலிய இடங்களில் உள்ள மக்கள் தினமும் காலையில் கொடிகாமம், சாவகச்சேரிச் சந்தைகளுக்குச் செல்லவோ, காரியாலயங்களுக்குச் செல்லவோ, நோயாளர் ஆஸ்பத்திரிக்குச் செல்லவோ முடியாமல் கஷ்டமடைகின்றனர், தினமும் காலை 7 மணிக்கு வரும் தாழையடி பஸ் நிலையங்களில் நேரம் பிந்தியும், சில நாட்களில் பிரயாணிகளை ஏற்றாதும் செல்வதால் மக்கள் பெருங் கஷ்டமடைகின்றனர், அதிகாரிகள் இதைக் கவனத்திற்கொண்டு தினமும் அதிகாலை கொடிகாமத்திலிருந்து புறப்படும் இரட்டைத்தட்டு வண்டியை எழுதுமட்டுவாளிலிருந்து புறப்படும்படி செய்தால் என்ன?

துரைராசா

கரம்பகம்.

## எங்கள் கதி என்ன?

கோரப் புயலாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கமும், தனித்தனி கொடைவள்ளல்களும் தங்களால் இயன்ற நிவாரண உதவியைச் செய்து துயர்படும் மக்களின் துன்பத்தைப் பசிப்பிணியைத் துடைத்துவருகின்றனர்.

ஆனல்! இதுவரை இராமநாதபுரக் குடியேற்றவாசிகளுக்கு அரசாங்கத்தின் பார்வை விழாதிருப்பது என்னவோ? கடன்பட்டுத் தமது கமத்தினை விதைத்தார்கள், இயற்கை அன்னையின் வெறுப்பால், புசல்புயலாக விதைத்த வயலில் ஒருபிடி நெல் தானும் எடுக்கமுடியாத நிலையிற் பரிதவிக்கிறனர்.

இது ஒருபுறமிருக்க, மேட்டுநிலங்களில் தங்களின் நெற்றி வியர்வை நிலத்திற் சிந்தப் பத்துவருடகாலமாகப் பாடுபட்டு வளர்த்த பயன்தருமரங்களான பலா, மா, தென்னை இவைகள் யாவும் கோரப்புயலின் கொடுமையால் பூமாதேவியின் மடியிற் புரண்டு வீழ்ந்து கிடக்கின்றன! "பனையால்விழுந்தவனை மாடேறி மிதித்தாற்போன்று" மழையில்லாது வருந்திய மக்களுக்கு கோரப்புயலின் கொடுமைகள் எத்தனை! இத்தனை இன்னல்களுக்கும் ஆளாகியிருக்கும் இராமநாத புரக் குடியேற்ற வாசிகள் இப்படியேவாழ்வதா. இன்றேல் நிவாரண உதவியேனும் கிடைக்குமா?

இரா.பரமநாதன்

இராமநாதபுரம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாஸ்கோவில் அமெரிக்க தூதராலயம் கடுமையாக தாக்கப்பட்டது

## 200 ஜன்னல்கள் நொருங்கின: தூதரின் கடும் ஆட்சேபனை

### மாஸ்கோ, பீகிங், ஹானேய் நகர்களில் ஆர்ப்பாட்டங்கள்

மாஸ்கோ, பெப். 10

**மாஸ்கோவிலுள்ள அமெரிக்க தூதராலயம் தாக்கப்பட்டது குறித்து இங்குள்ள அமெரிக்க ஸ்தானிகர், சோவியத் வெளிநாட்டு அமைச்சிடம் கடும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார். இவற்றை உடன் பழுதுபார்த்துத் தருமாறும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.**

வடவியட்னும்மீது அமெரிக்கத் தாக்குதலை ஆட்சேபித்து நேற்று மாஸ்கோவில் கம்யூனிஸ்ட் நாடுகளைச் சேர்ந்த 1000-க்கதிகமான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதன் விளைவாக 8 பத்திரிகை நிருபர்கள் காயமடைந்தனர்.

**200 ஜன்னல்கள் உடைந்தன**

ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்க தூதராலயத்தின் மீது நூற்றுக்கு அதிகமான எறிகுண்டுகளை வீசினர். இதன் விளைவாக 200 ஜன்னல்கள் நொருங்கிவிட்டன.

தூதராலயத்திற்கு போதுமான பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என அமெரிக்கத்தூதர் தனது ஆட்சேபனையில குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

இதுபற்றி வாஷிங்டனில் வெளியான அறிக்கை "கொடுமையான செயல்" எனக்குறிப்பிட்டுளது.

**பல நகர்களில் ஆர்ப்பாட்டம்**

நேற்று மாஸ்கோ, பீகிங், ஹானேய் ஆகிய நகரங்களில் அமெரிக்கத் தாக்குதலை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

"வடவியட்னுமுக்கெதிரான சீனுவின் தாக்குதல் சீனுவுக்கெதிரான ஆக்கிரமிப்பாகும்" என பீகிங்கில நேற்று வெளியான அறிக்கையொன்று கூறியது.

**"சீனு சும்மா இருக்காது"**

அமெரிக்கா, தென்வியட்னுமுக்கப்பால் யுத்தத்தை விஸ்தரிப்பது ஜெனிவா ஒப்பந்தத்தை மீறிய செயல் என்றும் சீனு இதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது என்றும் அறிக்கை கூறுகிறது.

அமெரிக்காவின் நடவடிக்கை ஜெனிவா ஒப்பந்தத்தை மீறிய செயல் என வடகொரியா அரசாங்கம் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

ஜாகர்த்தாவில் நேற்றுப் பேசிய இந்தோனேஷிய வெளிநாட்டுமந்திரி டாக்டர் சுபந்திரியோ, அமெரிக்க தாக்குதல் பெரிய யுத்தம் ஒன்றுக்கு வழி வகுக்கும் எனக் கூறினார்.

**பிரெஞ்சு பிரதமர்**

நேற்று டில்லியில் பேசிய பிரெஞ்சு பிரதமர் திரு. பொம்பிடோ, தென்வியட்னும் பிரச்னையை அந்த நாட்டிடமே விட்டுவிட்டு, பெரிய வல்லரசுகள் தங்கள் தலையீட்டை நிறுத்த வேண்டும் எனக் கூறினார்.

அமெரிக்க ஆக்கிரமிப்பை நிறுத்துமாறு வடவியட்னும், பிரிட்டன், ருஷ்யா ஆகிய நாடுகளைக் கேட்டிருக்கிறது.

பீகிங்கில் நடைபெற்ற அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் சீனப்பிரதமர் சூஎன்லாயும் கலந்து கொண்டார்.

**44 பேர் பலி**

கடந்த திங்கட்கிழமை தென்வியட்னும் அரசாங்க துருப்புகளுக்கும் வியட்காங் துருப்புகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் 44 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர். 3 அரசாங்கத் துருப்புகள் பலியாகியதாயும், இருவர் காயமடைந்ததாயும் அறிவிக்கப்படுகிறது.

புதிய நிலைமையை முன்னிட்டு வடகொரிய துருப்புகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக நகசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

**3 ஹெலிகோப்டர்கள்**

நேற்று சைகோனுக்கு 44 கிலோ மீட்டர் தூரத்தில் நடைபெற்ற ஒரு சண்டையில் ஒரு அமெரிக்கர் பலியானுர். 8 அமெரிக்கர்களுக்கு காயம் ஏற்பட்டது. 3 ஹெலிகோப்டர்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாயும் 18 வியட்காங்கியர் கொல்லப்பட்டதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

## பெரியார் பேசுகிறார்

சென்னை, பெப். 10

"இன்றையநிலையில் அரசாங்கம் நிரந்தரமாக கிளர்ச்சியை அடக்க வேண்டுமானுல், சுதந்திராக்கட்சியையும், தி. மு. கட்சியையும் சட்டவிரோதமான கட்சி எனப் பிரகடனம் செய்யவேண்டும், பத்திரிகைகள் சட்டம் (வாய்ப்பூட்டுச் சட்டம்) கொண்டுவந்து பத்திரிகைகளின் விஷம, துரோக, தூண்டிவிடும் செய்கைகளை ஒழிக்கவேண்டும். தூண்டிவிட்டவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து புத்திவரும்படியாகத் தண்டனை கொடுக்க வேண்டும்."

பெரியார் ஈ. வே. ரா. விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

## பிரான்ஸ உதவும்

புதுடில்லி, பெப். 10

இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திக்கு பிரான்ஸ் சாத்தியமான சகல உதவிகளும் புரியும் என பிரெஞ்சு பிரதமமந்திரி திரு. பொம்பிடோ இங்கு அறிவித்தார்.

## மாஸ்கோ—பம்பாய் தகவல் சேவை

மாஸ்கோ, பெப். 10

மாஸ்கோவில் ஆரம்பமாகியிருக்கும் நேரு பொருட்காட்சி 3 வாரங்களுக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

நேற்று ஸ்ரீமதி இந்திரா காந்தி மாஸ்கோவுக்கும்—பம்பாய்க்கும் [illegible] தகவல் சேவையை மாஸ்கோவில் ஆரம்பித்துவைத்தார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் பிரஸனேவை அவர் சந்தித்து சர்வதேச விவகாரங்கள்பற்றிப் பேச்சு நடத்தினுர். நேற்று மாஸ்கோவந்த இந்திராவை ருஷ்ய அயல் நாட்டு மந்திரி குரோமிகோ வரவேற்ருர்.

## 700 க்கு மேலான மாணவர்கள் தமிழ் நாட்டில் கைது

### பஸ்கள் எரிக்கப்பட்டன

சென்னை, பெப் 10

**ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மாணவர்களில், 700-க்கு மேலானுேர் நேற்று தமிழ்நாடு முழுதும் கைதுசெய்யப்பட்டனர்.**

ஆர்ப்பாட்ட மாணவர்கள் நேற்று சென்னையில் 8 அரசாங்க பஸ்களையும், டெலிபோன் தபாற்கந்தோர்களையும் சேதப்படுத்தினர். ஒரு பஸ் தீ மூட்டப்பட்டது. திருச்சியில் மற்ருெர் பஸ் கொளுத்தப்பட்டது. சம்பவங்களைத் தொடர்ந்து ராஜ்யத்தில் பஸ் போக்குவரத்தை அரசாங்கம் ஒருவாரம் நிறுத்திவைத்திருக்கிறது.

மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை கைவிடவேண்டுமென ராஜாஜி, அண்ணுதுரை ஆகிய தலைவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள்.

நேற்று திருச்சியில் 11 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டனர். பங்களூரில் 8 மாணவர்கள் உண்ணுவிரதம் இருந்தனர்.

## காந்திஜி வாழ்க்கைப்படம்

பூனு, பெப். 10

ரூ 50 லட்சம் டாலர் (ரூ 2 1/2 கோடி) செலவில் மகாத்மா காந்தியின் வாழ்க்கையைப்பற்றி எடுக்கப்படவிருக்கும் சினிமாப்படப் பிடிப்பின் ஆரம்ப வேலைகள் சென்ற மாதம் 26-ம் திகதி டில்லியில் ஆரம்பிக்கப்பட்டது.

## சாவன்

புதுடில்லி, பெப். 10

சீனர்கள் மீண்டும் இந்தியாவைத் தாக்கினுல் அவர்கள் விரட்டியடிக்கப்படுவார்கள் என்றும், இப்போது இந்தியா பூரண ஆயுதமாய் இருப்பதாயும் [illegible] பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் கூறினுர்.

## "ஹிந்தி எதிர்ப்புக்கு நானே தலைமை தாங்குவேன்"

### 6 மாதம் அவகாசம் கொடுக்க ராஜாஜி வேண்டுகோள்

சென்னை, பெப். 10

ஆட்சி மொழிப் பிரச்னைக்கு தீர்வுகாணும் பொறுப்பை பெரியவர்களிடம் விட்டுவிட்டு கிளர்ச்சியை உடன் நிறுத்தி கல்வியில் முழுக்கவனம் செலுத்துமாறு ராஜாஜி மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

ஆட்சி மொழிப் பிரச்னைக்கு அவசரத்தில் தீர்வுகாணமுடியாதென்றும், ஆனுல் அரசாங்கத்துக்கு அவகாசம் கொடுக்கவேண்டும் என்றும் அவர் கூறினுர்.

"மாணவர்கள் எல்லாக் கிளர்ச்சியையும் நிறுத்திவிட்டு உடனே கல்லூரிகளுக்குத் திரும்பவேண்டும். ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை நிறுத்துவது பற்றி வருத்தப்பட வேண்டியதில்லை. இவ்விஷயத்தில் மகாத்மா காந்தி காட்டிய வழியைப் பின்பற்றுவது கண்ணியமாகக் கருதப்படும். கிளர்ச்சியை நிறுத்துவதால் போரிசையாளருக்குத் தீங்கு ஒன்றும் நேராது" என்றும் ராஜாஜி கூறினுர்.

கிளர்ச்சியை நிறுத்துவதற்கான முகாந்திரத்தைக் குறிப்பிட்டு, ஆட்சி மொழிப் பிரச்னையில் நிலவரத்தை ஆளும் கட்சியின் போதுமான அளவுக்கு உணர்ந்துகொள்ளும்படி செய்துவிட்டது. இப் பிரச்னைக்குத் தீர்வுகாண அவர்களுக்கு 6 மாதம்கூட அவகாசம் தரலாம் என்ருர் ராஜாஜி.

இந்த அவகாசத்தின் முடிவில் அரசாங்கம் எதுவும் செய்ய முன்வராவிடில் தாமே முன்வந்து இக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கி நடத்தத் தயார் என்றும், அதுவரையில் ஆயுதத்தைப் பழுதுபடாமல் வைத்துக்கொள்ளும் படியும் மாணவர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

"இரட்டை ஆட்சி மொழி சரிவர வேலைசெய்யாது. ஆங்கிலமே முக்கியம். ஹிந்துஸ்தானி மொகலாய மன்னர் காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்டது. அதை இன்றுப் புதுப்பித்து புது ஹிந்தி உருவாக்கப்பட்டுளது" என்றும் ராஜாஜி கூறினுர்.

புதுடில்லி ஆத்திரமூட்டியதன் விளைவாக மாணவர்கள் பலாத்காரச்செயல்களில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்றும், அவர்கள் மீது நடவடிக்கையோ, பழிவாங்கும் செயலோ மேற்கொள்ளக்கூடாதென்றும் அவர் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

"சமீபத்தில் நடைபெற்ற கிளர்ச்சியின்போது பொலிஸ் அக்கிரமங்கள் குறித்தும் பொலிசாரைப் பழிக்கலாகாது. பொலிசார் மந்திரிகளின் நிர்பந்தத்தினுல் அவ்வாறு நடந்துகொள்ள நேர்ந்தது. பொலிசார் நல்லவர்கள்" என்று கூறிய ராஜாஜி மாணவர்கள் தாங்களாகவே ஹிந்தியை எதிர்த்து நின்றதைப் பாராட்டினுர்.

"ஆனுல் மாணவர்கள் தங்களுடைய கல்வியைப் பாழாக்கிக்கொள்ளக்கூடாது. நல்ல காலம் வருமென்று காத்திருக்கவேண்டும் நானும் மற்றும்பல பெரியமனிதர்களும் ஆங்கிலத்தை அகற்றுவதால உண்டாகக்கூடிய தீமைகளை எச்சரித்தோம் அதிகாரிகள் இதற்குச் செவிசாய்க்கவில்லை மாணவர் புரட்சி அரசாங்கத்துக்கு நியாயத்தை உணர்த்திவிட்டது. முதலமந்திரியும், முன்னுள் முதல்மந்திரியும் (காமராஜ்) ஹிந்திப் பித்தர்களின் கொள்கைக்காக மன்னிடப்படமுடியும் நிலைமைவரவில்லை. கடைசி தருணத்தில் சேர்ந்த இம்மாற்றத்துக்குக் காரணம் தேர்தலில் காங்கிரஸ் தோற்கடிக்கக்கூடாது என்பதேயாகும்" என்றும் ராஜாஜி கூறினுர்.

"ஆங்கிலம் இல்லையேல் காசிமீரமும் இல்லை. நாட்டின் கல்விமான்களின் மொழி ஆங்கிலம். அலுவலகங்களில் சிறந்தவர்கள் பயன்படுத்துவது ஆங்கிலம். ஆங்கிலம் உலகமொழி. உலக மன்றங்களில் இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்தியது ஆங்கிலமே. மகாத்மாகாந்தி, லாலாலஜபதிராய் போன்ற தலைவர்கள் உபயோகித்து மக்களைத் தட்டியெழுப்பிய மொழி ஆங்கிலமே. ஆங்கிலத்தை வைத்துக்கொண்டால நிர்வாகம் சிக்கனமாக இருக்கும்" என்றும் ராஜாஜி கூறினுர்.

## ம.பொ.சி. யோசனை

சென்னை, பெப். 10

"ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக காலவரம்பின்றி நீடிக்கும். இந்திமொழி அறியாதோர் ஆங்கிலத்தின் மூலமே உத்தியோகம் பெற எந்தவிதமான தடையும் இருக்காது" என உறுதி கூறும் தீர்மானம் ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி வைக்க மத்திய அரசாங்கம் முன்வரவேண்டும்" என தமிழரசுக்கழகத்தலைவர் திரு ம. பொ. சிவஞானகிராமணியர் கூறியிருக்கிருர்.

"எங்கெங்கும் ஆங்கிலம்", "இந்திய எல்லோருக்குமே ஆங்கிலம்" என்ற கோஷம் மாநில மொழியின் வளர்ச்சிக்கும் கேடுபயக்கக்கூடும்" என்றும் ம. பொ. சி. கூறினுர்.

## சீனு, ருஷ்யாவுக்கு அயூப். விஜயம்

ராவல்பிண்டி, பெப். 10

சீனப்பிரதமர் சூ-என்-லாயின் அழைப்பிற்கிணங்க பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் அடுத்தமாதம் முதல்வாரம் பீகிங்குக்கு விஜயம் செய்கிருர். மார்ச் கடைசி வாரத்தில் அவர் மாஸ்கோவுக்கு விஜயம் செய்கிருர்.

## ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, பெப். 10

வியட்னும் பிரச்னையை வியட்னுமியரே தீர்த்துக்கொள்ளும்படி விட்டு பெரிய வல்லரசுகள் ஒதுங்கியிருக்கவேண்டுமென ஜனுதிபதி ராதாகிருஷ்ணன் கூறினுர்.

## ஷேக் அப்துல்லா

புதுடில்லி, பெப். 10

டில்லி வந்திருக்கும் காஷ்மீர் தலைவர் ஷேக்அப்துல்லா நேற்று ஜனுதிபதி ராதாகிருஷ்ணனைச்சந்தித்தார். இன்று பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்துப் பேசினுர்

பஞ்சிம், பெப். 10

கோவாவில் நேற்றுஏற்பட்ட ஒரு வெடிவிபத்து காரணமாக 13 பேர் காயமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சூடுபட்டு விழுந்ததும் அவர் மீது மயங்கிவிழுந்தேன்"

## கட்டுவன் மேற்கு கொலை வழக்கில் இறந்தவரின் மனைவி சாட்சியம்

மாவிட்டபுரம், புதன்
கட்டுவன் மேற்கைச் சேர்ந்த கன்னியன்-நவநீதன் என்பவரைச் சென்ற வருடம் மார்கழி மாதம் 20-ம் திகதி சுட்டுக்கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்தவர்களான வல்லிபுரம்-வேலாயுதம், வேலுப்பிள்ளை-தம்பிராசா, யோகரத்தினம் என்றழைக்கப்படும் இராமு-யோகராசா ஆகிய மூவர் மீதும் கன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தியினால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ் எச். அத்துறுபாறு முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பொலிசாருக்கு முதல் தகவல் கொடுத்தவரும் சம்பவத்தை நேரில் கண்டவருமான கந்தன்-இராசனை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்தார்.

கந்தன்-இராசன் குறுக்கு விசாரணையில் கூறியதாவது:-

"சம்பவம் நடந்த சமயம் 3 தடவை துவக்குச் சூட்டுச் சத்தம் கேட்டது. முதலாவது வெடிச்சத்தம் கேட்டதும் காலஞ் சென்றவர் நிலத்தில் விழுந்து விட்டார். அதாவது முதலாவது எதிரி சுட்டதும் காலஞ்சென்றவர் விழுந்துவிட்டார். காலஞ்சென்றவர் விழுந்ததும் நான் திரும்பி ஓடினேன். நான் ஓடும் சமயம் இரண்டு தடவை துவக்குச் சூட்டுச் சத்தம் கேட்டது. அப்படியே பொலிஸிற்கும் கூறியுள்ளேன். வேலாயுதம் ஒரு தடவை சுட்டார் என்று பொலிசிற்கு கூறியுள்ளேன். மற்றச்சூடுகள் முதல் சூடு கேட்ட இடத்திலிருந்துதான் வந்தது. எதிரிகள் சுட்டதும் எந்தத் திசையை நோக்கி ஓடினார்கள் என்று எனக்குத் தெரியாது. காலஞ் சென்றவர் சூடுபட்டு விழுந்ததும் நான் செல்லப்பா வீட்டுப் பக்கமாக ஓடி விட்டேன். சம்பவ இடத்தில் சயிக்கிள் ஒன்றையும் நான் காணவில்லை. சம்பவத்தின் பின் கேள்விப்பட்டேன் காலஞ்சென்றவரின் சயிக்கிளைக் காணவில்லை என்று சம்பவத்தின்போதோ சம்பவத்தின் பின்னரோ காலஞ்சென்றவரின் தந்தையை நான் காணவில்லை. நான் முதலில் ஒரு பெண், "ஐயோ! ஐயோ!" எனக் கூக்குரலிடுவதைக் கேட்டுத்தான் சம்பவ இடத்திற்கு ஓடினேன். நான் சம்பவ இடத்தைநோக்கி ஓடிய போது முதலில் கண்டது காலஞ்சென்றவரை எதிரிகள் மூவரும் துரத்திக்கொண்டு வந்ததையே. சம்பவ இடத்திற்குச் சென்றபின் யாரேனும் கூக்குரலிடுவதையோ அளறி சண்டை பிடிப்பதையோ பார்க்கவுமில்லை. கேட்கவும் இல்லை. சூட்டுச் சம்பவத்திற்கு பின் நான் முதல் சந்தித்த நபர் செல்லப்பாவாகும். நான் அவரிடம் கண்டது முழுவதையும் கூறினேன். அதாவது வேலாயுதம் சுட்டதாகவும் அவரைத் தொடர்ந்து தம்பிராசா, யோகராசா ஆகியோர் வந்ததாகவும் கூறினேன்."

அடுத்ததாகக் காலஞ் சென்றவரின் மனைவி 19 வயது நிரம்பிய கண்மணி பொலிஸ் தரப்பில் சாட்சியாக அழைக்கப்பட்டார். கண்மணி தனது சாட்சியத்தில் கூறியதாவது-

சம்பவதினமிரவு 9-30 மணியளவில் வீட்டிலிருந்தேன். அச்சமயம்தான் காலஞ்சென்ற எனது புருஷன் வேலையால் வந்தார். வந்தவர் சயிக்கிளை மாமியார் வள்ளி வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டுச் சாப்பிட குசினிக்கு வந்தார். நான் சாப்பாட்டைக் கொடுத்தேன். அவர் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் எதிரிகள் மூவரும் வந்து வள்ளிமாமியின் கூரை ஓலையைப் பிடுங்கினர்கள். அத்துடன் வள்ளிமாமியின் வீட்டிற்கு கல் எறிந்தார்கள். வள்ளிக்கும் எதிரிகளுக்குமிடையில் ஏதாவது மனஸ்தாபம் இருப்பதாக எனக்குத் தெரியாது. நான் குசினியிலிருந்து வெளியில் வந்த போது எதிரிகள் கல் எறிந்து கொண்டிருந்தார்கள். அச்சமயம் எனது கணவன் "யாரடா!" என்று கூறிக்கொண்டு குசினியிலிருந்து வந்தார். அப்போது வேலாயுதம் "உங்காற்று நிக்கிறான்" என்று கூறிக்கொண்டு எனது புருஷனை நோக்கி ஓடி வந்தார்கள். நான் வேலாயுதம் துவக்கு வைத்திருப்பதைக் கண்டதும் புருஷனை "ஓடுங்கள்" என்றேன். அப்படிக் கூறியதும் அவர் ஓடினார். அவரைத்தொடர்ந்து எதிரிகள் துரத்திக்கொண்டு ஓடினார்கள். நான் அவர்களைத் தொடர்ந்து ஓடினேன். வேலாயுதம் முதலாவதாகவும் அவரைத் தொடர்ந்து தம்பிராசா, யோகராசா ஆகியோரும் ஓடினார்கள். 2-ம், 3-ம் எதிரிகள் முதலாம் எதிரியிடம் "பார்த்துப் பார்த்து ஓடுகிறான் வெடியை வையடா" என்றார்கள். அப்படி அவர்கள் கூறியதும் முதலாம் எதிரி சுட்டார். 1-ம் எதிரி சுட்டதும் புருஷன் முகம்குப்புற விழுந்தார். அவர்கள் ஓடிவிட்டார்கள்.

சம்பவதினம் மாலை நான் தம்பிராசாவின் கடைக்குச் சாமான் வாங்கச் சென்றேன். அச்சமயம் கடையில் தம்பிராசாவும் அவரின் மாமியார் பூதாத்தையும் இருந்தார்கள். நான் சாமான்வாங்கியதும் பூதாத்தை நான் முன்னர் வாங்கிய கடனை இன்னும் தரவில்லை என ஏசினார். நான் புருஷன் வேலையால் வந்ததும் பழைய கடனை இரண்டு ரூபாவையும் தருவதாகக் கூறி வந்தேன். அதைத் தவிர எதிரிகளுக்கும் எங்களுக்குமிடையில் வேறு எவ்வித மனஸ்தாபமும் இல்லை.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்- இரண்டு ரூபாய் கடனுக்காக நாலு ரூபாய்க்கு தோட்டா வாங்கிச் சுட்டார்களா?

நீதிபதி- இரண்டு ரூபாய்க்காகச் சுட்டார்களா?

சாட்சி- மௌனம்.

சாட்சியை எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்த போது சாட்சி கூறியதாவது-

முதலாம் எதிரி எனது கணவனைச் சுட்டதை நான் நேரடியாகக் கண்டேன். அவர் ஒரு தடவைதான் சுட்டார். நான் ஒருதடவைதான் சூட்டுச்சத்தத்தைக் கேட்டேன். சம்பவத்தின் பின் வேறு எந்தச் சத்தத்தையும் கேட்கவில்லை. பொலிசார் வரும்வரை நான் சம்பவ இடத்திலேயே இருந்தேன் சம்பவ தினம் எனது புருஷனையும் எதிரிகளையும் விட வேறு ஒருவரையும் நான் காணவில்லை. புருஷன் சுடுபட்டு விழுந்தபோது இராசனை நான் காணவில்லை. அவரைச் சம்பவத்தின் பின் இரண்டு மணி நேரம் கழித்தே சந்தித்தேன். புருஷன் சுடுபட்டு விழுந்ததும் நான் அவருக்குமேல அறிவுகெட்டு விழுந்து விட்டேன். வசாவிளானிலிருந்து ஆட்கள் வரும்பொழுதுதான் அறிவு மயக்கம் தெளிந்து எழும்பினேன். அதன் பின்னர்தான் இராஜன் என்னுடன் கதைத்தார். இராஜன் என்னிடம் வேலாயுதம் சுட்டதாகவும் தம்பிராசாவும், யோகராசாவும் கடும்படி கேட்டதாகவும் இதைபபற்றி பொலிசில் போய் அறிவிக்கப் போவதாகவும் கூறினார்.

சம்பவ இடத்திலிருந்து 100 யார் தூரத்தில் கிராமசேவகரின் வீடு இருக்கிறது. அவருக்கும் எனக்கும் எவ்வித மனஸ்தாபமும் இல்லை. அறிவு தெளிந்தபின் நான் அவரிடம் புகார் செய்யச் செல்லவில்லை.

இக்கட்டத்தில் நீதிபதி மேல் விசாரணையை இம்மாதம் பத்தொன்பதாம் திகதிக்கு ஒத்திவைத்து எதிரிகளை அத்திகதி வரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். எதிரிகள் தரப்பில் திரு. ஆர். ஜெ. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானார், கன்னுகம் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. எஸ். இராசநாயகத்தின் உதவியுடன் வழக்கிறிஞர் [illegible] வழக்கை நடத்தினர்.

---

கிளிநொச்சி

## குடியேற்ற வாசிகளின் கஷ்டங்கள்

யாழ் பாணம், வியாழன்
கிளிநொச்சித் தொகுதி குடியேற்றத்திட்டங்களில் வசிக்கும் வுவசாயக் குடும்பங்கள் மிகுந்தகஷ்டமடைந்து வருகின்றன. இம்முறை குளுவளிகாரணமாகவும் நீண்ட வரட்சிகாரணமாகவும் விவசாயம் மிகவும் பாதிக்கபபட்டுள்ளதால் விவசயத்தை நம்பியிருக்கும் விவசாயிகளுக்கு அன்றாட சீவியத்துக்கே வழியின்றி மிக்க கஷ்டமடைந்து வருகிறார்கள். இவர்களுக்கு அரசாங்கம் இதுவரை எதுவித உதவியுமளிக்கவில்லையென குறை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவசாயிகளின் குறைபாடுகளைத் தெரிவிக்கும் மகஜரொன்றை கிளிநொச்சிப்பகுதி வாலிப முன்னணித்தலைவர் திரு எம். எஸ். கே. இலட்சுமணன் சமூகசேவ துறை மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ளார். இவர்களுக்கு உடன் நிவாரண உதவி வழங்குமாறும் மகஜரில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

---

## "ஸ்ரீமதி பண்டிட் ஆஸி. கவர்ணர் ஜெனரல்"

கன்பரா, பெப். 10
ஆஸ்திரேலியாவுக்கு அடுத்த கவர்ணர் ஜெனரலாக ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டை அனுப்பவேண்டும் என "கான்பரா டைம்ஸ்" பத்திரிகை தனது ஆசிரியத் தலையங்கத்தில் கோரியிருக்கிறது.

"பிரதமர் மென்ஸிஸின் இஷ்டத்துக்கு விட்டால், ஒரு பிரிட்டிஷ்காரர் கவர்ணர் ஜெனரலாவார், ஆஸ்திரேலியமக்களோ ஒரு ஆஸ்திரேலியரோ அப்பதவிக்கு வரவேண்டும் என விரும்புவார்கள்.

இவ்விரண்டுக்கும் ஒரு சமரசஏற்பாடாக மற்றொரு காமன்வெல்த் பிரஜையான ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டை நியமிப்பது உத்தமமாக இருக்கும். ஸ்ரீமதி பண்டிட் இங்கு வந்து சில காலத்திற்குள் மக்களை வசீகரித்து விடுவார்" என்றும் அப்பத்திரிகை கூறுகிறது.

---

## பெப். 20-ல் ராஜேந்திரன் வழக்கு

சென்னை, பெப் 20
திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் எம். எல். ஏ. திரு. டி. வி. நாராயணசாமி ஆகியோர் மீதுள்ள வழக்கில் சாட்சிகள் விசாரணை வருகிற 20-ம் திகதி ஆரம்பமாகும்.

முன்னுவது மாகாண மாஜிஸ்ட்ரேட் முன்பு வழக்கு விசாரணைக்கு வந்தபோது இருவர் மீதும் குற்றப் பத்திரிகைகள் படிக்கப்பட்டன.

தாம் குற்றவாளிகள் அல்லவென்று அவர்கள் கூறினர்.

---

## கலைவிழா

கண்டி, புதன்
இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனைத் தமிழ்ச் சங்கத்தினரின் கலைவிழா இம்மாதம் 12-ம், 13-ம், 14-ம், திகதிகளில் பேராதனை பல்கலைக் கழகத்தில் நடைபெறும். புத்தக ஓவிய கண்காட்சியும் பல கலை நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெறுகின்றன.

---

# "ஒடுக்கப்படும் தமிழினம்வாழ ஒருபிரதேசம் வேண்டும்"

## உடுப்பிட்டி பிரசார கூட்டத்தில் திரு. செல்வநாயகம் விளக்கம்

உடுப்பிட்டி, புதன்
"எமது கொள்கை எந்தச் சிறிய பிள்ளைக்கும் விளங்கக்கூடிய இலேசான கொள்கை. தமிழ்மக்களுக்கு விமோசனமளிக்கும் சமஷ், குடியேற்றத் திட்டம் நீர்ப்பாசனம் ஆகியவற்றிற்கான சிறந்த திட்டங்களை முன்வைத்து நாம் போராடுகிறோம். எமக்கென்று ஓர் உறைவிடம் இருக்கவேண்டும். இன்று நடைபெறும் ஒற்றையாட்சியை நாம் விலக்கிவிட்டால் அடுத்து சமஷ்டி ஆட்சி நடக்க வேண்டும், அல்லது நாம பிரிந்து தனிப்ரசு அமைக்க வேண்டும். உலகின் சகல பகுதிகளிலும் ஒடுக்கப்பட்டுவரும் தமிழ்இனத்திற்கு உரிமை கொண்டாடவென ஒரு பிரதேசம் வேண்டும். எமது கொள்கைகளைத் தமிழ்மக்கள் அனேகர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள், அவர்கள் விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டார்கள்."

இவ்வாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நேற்றிரவு அல்வை மாவிசந்தைப் பிள்ளையார் கோவிலுக்கண்மையில் உடுப்பிட்டித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு க. ஜெயக்கொடியை ஆதரிக்கு முகமாக நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு. செல்வநாயகம் மேலும் கூறியதாவது:

ஒரு கொள்கைக்குக் கட்டுப்பட்டவர்களாக நாம் பாராளுமன்றம் செல்ல வேண்டும். எந்த அரசாங்கம் நமது உரிமைகளை மறுக்கிறதோ அந்த அரசாங்கத்துடன் ஒத்துழையாமல் அதன் வீழ்ச்சிக்குக் காரணமாவோமே தவிர மந்திரிப் பதவிகளுக்கு ஆசைபட்டுத் தமிழ் மக்களின் தன்மானத்தை அடகு வைக்க மாட்டோம்.

மட்டக்களப்பு முன்னுள் எம். பி. திரு செ. இராசதுரை பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சுக்கான் பிடிப்பவன் இல்லாத ஓடம் போன்று வகையான வழிகாட்டிகள் இல்லாமல் சிறிது காலம் தமிழினம் மிகவும் தத்தளித்த நிலையிலிருந்தது. இன்று தமிழரசுக்கட்சி அப்பணியைச் செய்து வருகிறது முப்பு பறிகொடுத்த உரிமைகளை இரண்டே வருட அவகாசத்தில் மீண்டும் பெற்றுத் தருவதாக உயிர்ப்பிச்சை கேட்கிறார்கள். நம் நாட்டிலிருந்து வெள்ளையர் வெளியேறியபோது அவர்கள் கொடியும் வெளியேற்றப்பட்டது, அப்போது நமது நாட்டிற்கென ஒரு கொடி தேவைப்பட்டது. அது தமிழரை ஒடுக்கும் கொடியாக அமைந்தது. காலஞ் செல்லச்செல்ல தமிழ் மக்களின் தொகை அதிகரிப்பதை உணர்ந்த சிங்கள மக்கள் நம்மைப் பிரித்து ஆளமல் பிரித்து அழிக்கும் பல திட்டங்களை மேற்கொண்டார்கள். பத்துலட்சம் தமிழர்களுக்கு பிரஜா உரிமை பறிக்கப்பட்டதால் இன்று மலைநாட்டில் அவர்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றம் செல்ல முடியவில்லை. வீரமுனை என்கிற அழகிய கிராமம் கினியாகலை ஆகவும் மல்லிகைத்தீவு உகணை ஆகவும் பெயர் மாற்றப்பட்டுள்ளன. குளக்கோட்ட மகாராஜா ஆண்ட தம்பலகாமம், கொட்டியாரப்பற்று முதலிய இடங்கள் இன்று குடியேற்றத் திட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன.

1 64 360 பேர் இன்றுவேலையில்லாமல் இருக்கிறார்கள். நூறுபேர் தேவைப்பட்ட இராணுவத்திற்கு 60,000 பேர் விண்ணப்பமனுப்பியுள்ளார்கள். இந்த நிலைமையில் சில மாற்றுக் கட்சியினர் உத்தியோகம் எடுத்துத் தருவதாக வாக்காளர்களை ஏமாற்றுவது முறையல்ல.

மகாவலிகங்கையை கிளிநொச்சிக்குக் கொண்டு வருவேன் என்று ஒருவரும் கல்லோயாவிற்குக் கொண்டு வருவேன் என்று இன்னொருவரும் ஒற்றைக்காலில் நிற்கினர். மகாவலி கங்கையை வடக்கிற்குத் திருப்ப ஐந்து லட்சம் ரூபாய் போதுமென்று ஒருவர் கணக்கு காட்டியுள்ளார். மகாவலிகங்கையை எவ்வாறு திருப்பலாம் என்ற திட்டங்களையும் படங்களையும்தயாரிப்பதற்கே இதுவரையில் எட்டு லட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறதென்றால் 5 லட்சம் ரூபாய் முழுதிட்டத்தையும் நிறைவேற்றப் போதுமென்ற கணக்கை எவர் நம்புவார்கள்? நமக்கென ஒரு சொந்த ஆட்சியிருந்தால் மகாவலிகங்கையை மட்டுமல்ல, மண்ணுக்குள் மாமணிகள் போல் மறைந்துகிடக்கும் இல்மனைட், முதலிய தாதுப் பொருட்களையும் வெளியே கொண்டுவர முடியும். அந்த ஆட்சிக்காகத்தான் நாம் போராடி வருகிறோம்.

கட்சி நிதியெங்கே என்று சிலர் கணக்குக் கேட்கிறார்கள். பணம் கொடுத்தவர்கள் கேட்காத கணக்கை இவர்கள் கேட்கிறார்கள். உலக வரலாற்றில் எந்த ஒரு அரசியல் இயக்கமும் கணக்குக்காட்டியதில்லை. ஒரே குடும்பத்தில் உள்ளவர்கள் கணக்குக்கேட்பதில்லை. கேட்டால் அது பண்பல்ல குடும்பத்திற்கு வெளியே இருந்து கணக்கு கேட்பவர்கள் நம்மைக் கொள்ளையடிப்பவர்கள்.

திரு. க. ஜெயக்கொடி பேசுகையில் குறிப்பிட்டதாவது-

சுருட்டையும், தேசீர் கோப்பையையும் காட்டித் தமிழர்களை ஏமாற்றிய காலம் மலையேறிவிட்டது. கடந்தகால அரசியல் வாழ்வில் தமிழினத்திற்கு உரிமைகள் பாதிக்கப்பட்ட நோக்கால் அரசாங்கத்தை எதிர்த்துத் தமிழரசுக்கட்சி போராடவில்லையென்றால் தமிழினத்தின் விடுதலைக்காகப் பணத்தையும் பதவியையும் துறந்து பாதேசிகள் போலத் தலைவர்கள் நமது கட்சியில் இயங்குவது பிழையென்றால் தமிழரசுக்கட்சிக்கு வாக்களிக்கவேண்டாம். சுயசிந்தனையோடு அரசியல் வரலாற்றை ஆராய்ந்துபார்த்தால் எந்தக் கட்சியின் மூலம் விமோசனம் கிடைக்கும் என்பதை உணரலாம்.

திருவாளர்கள் க. துரைரத்தினம், அ. அமிர்தலிங்கம், வட்டுக்கோட்டை, உடுவில் தமிழரசு வேட்பாளர் திரு. தர்மலிங்கம், திரு மெய்பரசன், அட்வகேட் திரு. நவரத்தினம், சாவகச்சேரித் தொகுதி வேட்பாளர் திரு. கதிரவேலுப்பிள்ளை, திருமதி மங்கையர்க்கரசி ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர்.

---

## புதியதேர்வேலை ஆரம்பம்

யாழ் பாணம், புதன்
நந்தாவில் மனோன்மணி அம்பாள் புதிய தேரின் கடடுக்கண் காட்டுலவபவம் கடந்த திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

இத்தேர் அமைக்கும் பணியை திருநெல்வேலி சிற்பாசாரியார் திரு. ஆறுமுகத்தின் புதல்வர் திரு ஆர். தம்பித்துரை சகோதரர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். —

## மலேஷியாவுக்கு 950 பிரிட்டிஷ் வீரர்

லண்டன், பெப். 10
வருகிற வெள்ளிக்கிழமை 950 பிரிட்டிஷ் கருபுகள் மலேஷியாவுக்கு அனுப்பிவைக்கப்படும் என லண்டனில் அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 500 நியமனங்களுக்கு அங்கீகாரமில்லை

பம்பலப்பிட்டி, புதன்

கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்தில் சேவை புரிவதற்காக சென்றவருடம் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வழங்கப்பட்ட சுமார் 500 நியமனங்களை அங்கீகரிப்பதில்லை என மேற்குறிப்பிட்ட மேற்படி ஸ்தாபன டைரக்டர்கள் சபையின் விசேஷ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## 10 வட்டாரங்களில் யு. என். பி. வெற்றி

பதுளை, புதன்

மொனருகலைத் தொகுதியிலுள்ள மதுவல கிராமசபையின் 12 வட்டாரங்களில் 10 வட்டாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டியுள்ளது. மிகுதி இரண்டும் சுதந்திரக் கட்சிக்கு கிடைத்துள்ளது.

# கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்காணும் வேலைகள் செய்து முடிப்பதற்கு கேள்வி விண்ணப்பங்கள் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் அவர்களால் கோரப்படுகின்றன.

1. ஓர்த்துமாதா தெரு: கல்லுப்போட்டுத்தார்ஊற்றுதல்
2. பிள்ளையார் கோவில் ஒழுங்கை: கல்லுப்போட்டுத் தார் ஊற்றுதல்.
3. மணல் ஒழுங்கை: " " "
4. மூக்கம் ஒழுங்கை: " " "
5. உடையார் ஒழுங்கை: " " "
6. பெருவெட்டி ஒழுங்கை: " " "
7. பிராமண ஒழுங்கை: " " "
8. காளிகோவில் கிணற்றடி ஒழுங்கை: " " "
9. முதலாம்கட்டை ஒழுங்கை: " " "
10. தட்டாதெரு ஒழுங்கை: (W 9) " " "
11. ஆத்தியடி ஒழுங்கை: " " "

2. கேள்வி விண்ணப்பங்கள் 20-2-1965ல் பிற்பகல் இரண்டு மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக இரு பத்திரங்களில் நிரப்பப்பட்டு தலைவர், நகரசபை, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

3. விண்ணப்பப் பிரதிகள் 18-2-65 பிற்பகல் 2 மணி வரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் பெறுபவர் ரூபா 25-00 பிணைப்பணமும், ரூபா 5-00 பிரவேசப்பணமும் செலுத்தவேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கிடைத்த ஒரு வாரத்துக்குள் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலையை ஆரம்பிக்கவேண்டும். அங்ஙனம் தவறுபவரின் பிணைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

5. மேற்படி வேலைகளின் முழு விபரங்கள் அறிய விரும்புபவர்கள் நகரசபைக் காரியாலயத்தில் காரியாலய நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

வே. நாகநாதன்
தலைவருக்காக,
நகரசபை, பருத்தித்துறை.

நகரசபைக் காரியாலயம்,
பருத்தித்துறை. 6-2-65 1603

## கேள்விப்பத்திரங்கள் கோரிக்கை

வலி-மேற்கு பல நோக்க கூட்டுறவுச் சங்கங்களின் சமாச கல்லுண்டாய் உப்பளத்தின் தென்கரை பகுதியில்,
தரவைக் கல்லுள்,
850 அடி நீளம்,
20 அடி அகலம்,
2 அடி ஆழமான வாய்க்கால் வெட்டுவதற்கு ஒப்பந்தம் கோரப்படுகின்றது.

தெளிவான விபரங்களை அறிய விரும்புவோர் உப்பள காரியாலயத்தில், வேலை நேரத்தில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 20-2-65-ம் திகதிக்கு முன்னதாக சமாசத் தலைவருக்கு பதிவுத்தபாலில் எழுதி அனுப்ப வேண்டும்.

தலைவர்,
வலி-மேற்கு பலநோக்க கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
சங்கானை,
8-2-65 1601

REGAL — JAFFNA
NOW SHOWING
Kerwin Mathews
in
THE MANIAC
(Cinemascope) (Adults Only)

மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்: 485
குருடட், மீனுகுமாரி நடித்த
சாஹிபிபி ஒர் குலாம்
(ஜனாதிபதி பரிசு பெற்ற ஹிந்தி)

ராஜா சினிமா (சுழிபுரம்)
மனோகர் நடிக்கும்
கொஞ்சுர்குமரி

## தேவை

எமது கைத்தொழில் ஸ்தாபனத்திற்குதும்புக்கட்டு, ஊர்க்குகட்டு, சவர்க்காரம் (Soapmaker) தயாரிக்கக்கூடிய தயாரிப்பாளர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்: சசிமலா இன்டஸ்ரீஸ் 72/1, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1566

எமது தயாரிப்புகளை சயிக்கிள் மூலம் விற்பனை செய்யக்கூடிய சயிக்கிள் சேல்ஸ்மென்கள் தேவை. நேரில் வரவும். சசிமலா இண்டஸ்ரீஸ், 72/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1567

## சர்ச்சிலுக்கு அஞ்சலி

கொழும்பு, புதன்

"சேர் வின்ஸ்டன் சர்ச்சிலைப் போன்ற ஒருவர் வருங்காலத்தின் பல சந்ததிகளில் பிறக்கப்போவதில்லை உலகத்தில் இருள் சூழ்ந்த காலத்தில்தான் இப்படியான தலைவர்கள் தோன்றுகிறார்கள். அதிகாரத்தின் மூலம் அரசியல்வாதிகள் சண்டையையும், சச்சரவையும் உண்டாக்கும் பொழுதுதான் சர்ச்சில் போன்ற தலைவர்களின் உதவி பெரிதும் தேவைப்படுகின்றது. வைதிகக் குடும்பத்தில் பிறந்த சர்ச்சில் குறிப்பிடத்தக்க அளவில் கல்வியில் பண்டிதத்தியம் பெறவில்லை. எழுதவும், வாசிக்கவும்தான் ஆங்கிலம் கற்றிருந்தார். அதுடன் ராணுவத்துறையில் சர்ச்சில் ஒரு சிறந்த போர் வீரராகவும் இருந்தார். அவருடன் தன்னுடன் கூடி வாழ்ந்த மக்களையும் ஒரு குறிக்கப்பட்ட எல்லையை நோக்கி வேலை செய்யும்படி வைத்தார்". இவ்வாறு கீதயரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா. கொழும்பு வை. எம். சி. ஏ. கட்டடத்தில் சர்ச்சில் ஞாபகார்த்தக் கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

## வரி விளம்பரம்

### கல்வி

மாணவ, மாணவிகளே! வர்த்தக கணக்கியல் பாடங்களை ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் கற்கவிரும்புகிறீர்களா? பலரும் படித்துப் பயனடைந்த வர்த்தக கணக்கியல் கல்லூரியை (330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்) நாடுங்கள். காலையும் மாலையும் வகுப்புகள் நடைபெறுகின்றன. 1561

### தேவை

விற்பனையாளருடன் ரூபா 3000-00 பிணையும் செலுத்தக்கூடிய முன் அநுபவமும், நிர்வாகத் திறமையும் கல்வித் தகைமையும் கொண்டவரின் மனேஜர் தேவை. தகைமைக்கேற்ற சம்பளம். காரியதரிசி, கோதேனல் போட்ஸ் கிளப், இராசாகட்டிடம், பெரியகடை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். நிர்வாக அதிகாரி. 1564

### தேவை

முன் அநுபவமும் நிர்வாகத் திறமையுமுள்ள பெண் விகிதர் தேவை. நஷனல் அச்சகம், 1-ம் மாடி இராசா கட்டடம், பெரியகடை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். நிர்வாக அதிகாரி. 1563

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலேக் இனம் தொய்வுக்கு 10 நாள் மருந்து 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50

வைத்தியர் பரிபூரணானந்தா
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்

5-வது வெற்றி வாரம்!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்:
காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30



சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
மற்றும் 6 சினிமாக்ஸ் திரைகளில்
ஜெமினி கணேசன் - சாவித்திரி
நடித்த
கற்பகம்

விற்பனைக்கு வந்துவிட்டன
எங்கும் கிடைக்கும்

குதிரை மார்க் வாளிகள்

பளபளப்பான மிகச் சிறந்தரக இரும்புத்தகட்டில் எங்கள் புதிய இரும்பு ஆலையில் துத்த நாகப்பூச்சோடு உருவாக்கப் பட்டவை. உங்கள் தேவைக்கு வேண்டிய எல்லாவித அளவுகளில் கிடைக்கும்.

உங்கள் தேவைக்கான 'குதிரை மார்க்' வாளிகளை சமீபத்திலுள்ள உங்கள் வியாபாரிகளிடம் கேட்டுவாங்குங்கள்.

மொத்த விற்பனை விபரங்களுக்கு

'எல்பிஹெளம் ஹவுஸ்'

101, நொறிஸ் வீதி,
கொழும்பு-11.

காங்கேசன்துறை வீதி,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அவமானம்" என்ற நாடகத்தின் மூலம் வசூலான நாலாயிரம் ரூபாய்க்கான காசோலையை 'ஈழநாடு' சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்காக ராஜ் நகைச் சுவை நாடகமன்றத் தலைவர் திரு ராஜரத்தினம் 'ஈழநாடு' சூறாவளி நிதிச் சபைத்தலைவர் டாக்டர் கே கனகரத்தினத்திடம் கையளிக்கிறார்.

# யாழ்ப்பாணத்தில் சீன சித்திரக் கண்காட்சி

## நீடிக்கப்படக் கூடும்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்று வரும் சீன சித்திரப் பொருட்காட்சி இன்று முடிவடையும்.

இக்காட்சியில் பல வண்ண ஓவியங்களும், அற்புத வேலைப்பாடமைந்த சித்திர விளக்குகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

நெல் மணிகளைக் கொண்டும் எள்ளைக் கொண்டும், சீன உணவான "நூடில்ஸ்" ஸைக் கொண்டும் தயாரிக்கப்பட்டிருக்கும் சித்திரவிசித்திரவினங்கள் காட்சியில் சிகரமாக விளங்குகின்றன.

இன்று 11-ம் திகதி வியாழக்கிழமை இக்காட்சியின் கடைசித் தினம் காட்சியை நீடிக்க வேண்டுமென பொதுமக்கள் கோரினால் அது நீடிக்கப்படுமென காட்சிஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

## தண்டனை நிறைவேற்றம் ஒத்திவைப்பு

பம்பலப்பிட்டி, புதன்

உருத்திரபுரம் ஐயர் கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட வேலுப்பிள்ளை, கோகிலாம்பாள் ஆகிய இருவரினதும் மரணதண்டனை நிறைவேற்றம் முறையே ஏப்ரல் 20-ம், 21-ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 25 ஊழியர், சாகும்வரை உண்ணாவிரதம்

பம்பலப்பிட்டி, புதன்

கைத்தொழில் பொருட்காட்சியில் வேலைசெய்துவரும் 25-க்கு மேற்பட்ட ஊழியர்கள் நேற்றுமுதல் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்கள்.

கைத்தொழில் பொருட்காட்சி தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களை திடீர் வேலைநீக்கம் செய்ததை ஆட்சேபிக்கு முகமாகவே இவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பன்னவேலை வகுப்பு அங்குரார்ப்பணம்

துனுக்காய், புதன்

'இன்று சிறு தீவான இலங்கையில் வேலையின்றிக் கஷ்டப்படுகின்றனர். இத்தகையவர்கள் குடிசைக்கைத்தொழிலும் விவசாயத்துறையிலும் ஈடுபடுவார்களேயானால் வேலையில்லாத்திண்டாட்டம் நீங்குவதுடன் நாட்டின் பொருளாதாரத்தை விருத்திசெய்ய உதவுபவர்களாவார்கள்.'

இவ்வாறு துனுக்காய்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. க. ஜெயகாந்தன் மல்லாவி அரசினர் பாடசாலையில் பன்னவேலை வகுப்பு ஒன்றை அங்குரார்ப்பணம்செய்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மல்லாவி ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கிராமமுன்னேற்றச் சங்கத்தாரால் மேற்படி வகுப்பு நடத்தப்படவிருக்கிறது.

## ஆசிரியருக்குக் கடிதம்

## ஆஸ்பத்திரியில்

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில், யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் நோய்வு நோயாளராகிய சுமார் எழுபது பேர் வரை, வழமைபோல் ஊசிமருந்து ஏற்றிவிட்டு, வாதத்தால் தூங்க முடியாது, வழமையாகப் படுத்திருக்கும் அறையில் இருந்தனர். அன்று வெளிநோயாளர் தங்குமிடத்தில் கடமையாற்றிய கங்காணி, ஆண் தாதி இருவரும் வந்து, எங்களுக்கு ஆஸ்பத்திரிக் காரியதரிசியும், வைத்திய அத்தியட்சகரும் கொடுத்த உத்தரவுப்படி அனைவரையும் உடனடியாக வெளியேறும்படிக் கட்டாயப்படுத்தினர். நாங்கள் வெளியேற மறுத்தோம். உடனே அவர்கள், பொலிசாரைக் கூட்டிவந்து எங்களை அடித்துவிரட்டுவோம் என மிரட்டினார்கள். எங்கள் நோய் வேதனையிலும் பார்க்க அவர்கள் தந்த வேதனையோ தாங்க முடியவில்லை.

யாழ்ப்பாணத் தொய்வு நோயாளன்

வ. கணபதிப்பிள்ளை

கொட்டடி

# 'கூட்டரசில்சேர முன்வருக'

## வடக்குக்கு கொல்வின் அழைப்பு

மாவிட்டபுரம், புதன்

"வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் கைப்பொம்மைகளாக வருவதற்கு வடமாகாண மக்கள் விரும்புகிறார்களா? அல்லது இலங்கையின் முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து நாட்டை வளம்படுத்த விரும்புகிறார்களா?" என்று தெல்லிப்பழை சந்தை மைதானத்தில் காங்கேசன் துறைத்தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. கீ. வைகுந்தவாசனை ஆதரித்து நடைபெற்ற கூட்டமொன்றில் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா பேசுகையில் குறிப்பிட்டார்.

"திரு டட்லி குணவர்த்தனவுக்கோ அல்லது கே எம் பி ராஜரத்தினவுக்கோ எதிராக ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர் எவரையும் நிறுத்தவில்லை. தமிழ் விரோத நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாக ஈடுபட்டிருக்கிறது, இதனை வடக்கு மாகாண மக்கள் உணர வேண்டும்" என்றும் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா கேட்டுக்கொண்டார்.

"கூட்டாட்சி தோல்வியடைந்த பின்னர், நாடு இரண்டாக பிரிக்கப்பட்டுவிட்டது. முற்போக்குச் சக்திகள் கூட்டரசாங்கத்தில் சேர்ந்துகொண்டன. மற்றைய புரட்சிவாத பிரிவினர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துவிட்டனர்.

இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்திகளை கூட்டரசாங்கம் ஆதரிக்கிறது. 1956-ம் ஆண்டிலிருந்து இதுவரை 100 புதிய கைத்தொழில்கள் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தில் வடக்கு மாகாணம் சேர்ந்துகொள்ள விரும்புகிறதா? இல்லையா? கூட்டரசாங்க எம். பிக்களை பார்லிமெண்டுக்கு நீங்கள் அனுப்பினால் நிச்சயமாக அதற்குரிய நன்மைகளை நீங்கள் பெறுவீர்கள்" என்றும் அவர் கூறினார்.

கூட்டரசாங்கம் தோன்றியதைத் தொடர்ந்து பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா புதியநடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால் பிற்போக்கு சக்திகளின் திட்டத்தினால் இத்திட்டங்கள் தடைப்பட்டுவிட்டன. எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டரசாங்கம் நிச்சயமாக வெற்றி பெறும். அதனுடன் பெரும்பான்மை பலத்துடன் பார்லிமெண்டுக்குள் நுழையும் ஆகையினால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க வடக்கைத்தேர்ந்தனுப்புங்கள். இதன் பலனாக வடமாகாணத்திலே எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகளையும் தீர்த்துவைக்க வழிபிறக்கும். சோஷலிஸ் பாதையில் இலங்கையை முன்னேற்ற வழிகோலுங்கள்" என்றும் டாக்டர் கொல்வின் தெரிவித்தார்.

காங்கேசன்துறைத் தொகுதி அபேட்சகர் திரு. கீ வைகுந்தவாசகன் பேசுகையில் கூறியதாவது: "திறமைக்கும், தியாகத்திற்கும் முன் எமக்குத் தேவையானது சரியான கொள்கைதான். சரியான கொள்கை, ஸ்ரீலங்கா இடதுசாரி கூட்டணி அரசாங்கத்தை ஆதரிப்பதே. ஏனென்றால் இந்த அரசாங்கம் 1964-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட பின்னர் தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆக வேண்டிய முக்கிய படிகளை எடுத்தது ஆனால் இந்த முயற்சிகள் பயன்தருவதற்குமுன்னர் கூட்டணி அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டார்கள்

திருவாளர்கள் எஸ் கார்த்திகேசு, எஸ் விஜயானந்தன் உட்பட மற்றும் பலர் பேசினார்கள்

# "வடக்கையும் கிழக்கையும் இணைத்தது தமிழரசே"

## கோண்டாவிலில் இராசதுரை

கோண்டாவில், புதன்

"தமிழரசு கட்சியினரைப் பார்த்து நீங்கள் சாதித்தது என்ன? என்று சிலர் கேட்கின்றார்கள் வடக்கையும் கிழக்கையும் இணைத்தோம் மலைநாட்டுத் தமிழரின் உரிமைகளைப் பேணிக்காக்க ஒரு கழகம் அமைத்தோம். இதனுடன் தமிழனின் இழந்த உரிமைகளைப் பெறுவதற்கு தொடர்ந்து போராடுகின்றோம்" என்று நேற்றுமாலை கோண்டாவிலில் நல்லூர் தொகுதி அபேட்சகர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் மட்டக்களப்பு முன்னைள் எம். பி. திரு செ. இராசதுரை பேசுகையில் கூறினார்

(5-ம் கலம் பார்க்க)

# வல்வை ஆஸ்பத்திரி ஊழியர் வேலைநிறுத்தம் வாபஸ்

## அசம்பாவிதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாய் வாக்குறுதி

யாழ்ப்பாணம், வியாழன்

**வல்வெட்டித்துறை அரசினர் (இந்திராணி) ஆஸ்பத்திரியில் நேற்று வேலைநிறுத்தம் செய்த கனிஷ்ட ஊழியர்கள் அனைவரும் நேற்றுப் பிறபகல் 3-30 மணிக்கு வேலைக்குத் திரும்பினர்.**

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் யூனியன் பிரதிநிதிகளும், உடுப்பிட்டி நகரசபைத் தலைவர் திரு. தர்மரத்தினம், நகரசபை அங்கத்தினர் திரு எஸ். சிவராஜா, பருத்தித் துறைத் தொகுதி முன்னாள் எம். பி. திரு. க. துரைரத்தினம் பருத்தித்துறை தொகுதியில் கம்யூனிஸ்ட் அபேட்சகராகப் போட்டியிடும் திரு. மோதிலால் நேரு ஆகியோர் யாழ்ப்பாண மாவட்ட வைத்திய அதிகாரிகளையும் நேற்றுக்காலை சந்தித்தனர்:

ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு இனி இவ்விதமான இடையூறு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதாக நகரசபைத்தலைவரும், அங்கத்தினரும் உறுதியளித்ததின் பேரில் வேலைநிறுத்தத்தை வாபஸ்பெற யூனியன் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் ஊழியர்கள் வெளியாரினால் தாக்கப்படுவது இது ஐந்தாவது தடவையாகும்.

## வியட்னும் தாக்குதல் நிறுத்தப்பட்டன

வாஷிங்டன், பெப், 10

வடக்குவியட்னும் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது அமெரிக்காவின் தாக்குதல்கள் நிறுத்தப்பட்டுள்ளபோதிலும் நிலைமையை அமெரிக்கா நுட்பமாக கண்காணித்துவரும் என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

## மலேசிய தகராறு

### மத்தியஸ்தம் வகிக்க பாக். சம்மதம்

கோலாலம்பூர், பெப். 10

இந்தோனேஷியாவுக்கும் மலேசியாவுக்குமிடையேயுள்ள சச்சரவை தீர்த்துவைப்பதில் மத்தியஸ்தம் வகிக்க பாகிஸ்தான் தயாராக உள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. கோலாலம்பூரிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் இதுசம்பந்தமான கடிதத்தை மலேசியப் பிரதமர் திரு துங்கு அப்துல் ரஹ்மானிடம் கையளித்துள்ளார்:

## பட்டின சபை அனுதாபம்

யாழ்ப்பாணம், வியாழன்

சமீபத்தில் வீசிய சூறாவளிக்குப் பலியானவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் சங்கானை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கான பிரேரணை 7-ம் வட்டார அங்கத்தவர் திரு. கே. செல்வராஜாவினால் கொண்டுவரப்பட்டது,

பட்டின சபைத் தலைவர் திரு. க. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காலஞ்சென்ற கதிரவேலுச்சட்டம்பியரின் ஞாபகார்த்தமாக அவரின் இல்லத்திலிருந்து ஆரம்பமாகும் ஒழுங்கைக்கு 'சட்டம்பியார் வீதி' எனப் பெயரிடப்படவேண்டுமென பட்டின சபைத் தலைவரினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையும் ஏகமனதாக நிறைவேறியது.

(4-ம் கலத் தொடர்ச்சி)

'சத்தியாக்கிரகத்தின்போது திரட்டிய பல லட்சம் ரூபாவையும் தமிழரசுக் கட்சியினர் என்ன செய்தார்கள் என்று சிலர் கேட்கின்றனர் இப்படிக் கேட்பதற்கு அவர்கள் தமிழரசுக்கட்சி நிர்வாக உறுப்பினர்களா அல்லது நிதிசேர்க்கும் பணியில் முன்னின்று உழைத்தவர்களா. இவர்களுக்கு நான் ஒன்று கூறவிரும்புகின்றேன்; இந்தப்பணம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் பத்திரமாகவிருக்கின்றது" என்றும் திரு. இராசதுரை கூறினார்.

'தமிழர்கள் இன்று உரிமைகளை இழந்து வாழ்கின்றனர்' உத்தியோகம் இல்லை. சொந்த மொழிக்கு உரிய இடமில்லை. இந்தக் கட்டத்தில் நாம் பிரிந்து சென்று பாராளுமன்றம் போவதால் பயனில்லை தமிழரசுக் கட்சி அங்கத்தவர்கள் எல்லோரையும் அனுப்பி எமது இழந்த உரிமைகளை மீட்க வழிகோலுங்கள். இதற்கு நீங்கள் உங்கள் வாக்குரிமைகளை சரியான முறையில் இம்முறை பயன்படுத்த வேண்டும்" என்றும் திரு. இராசதுரை கூறினார்.

உடுவில் முன்னாள் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில், தமிழ்மக்களின் பிரச்சினைகளை வாளினாலும், சூழ்ச்சியினாலும் தீர்க்கமுடியாதென்றும் எமது ஐக்கியத்தின் மூலம்தான் இதற்கான தீர்வு காணமுடியுமென்றும் சத்தியாக்கிரகம் மிகுந்த பயனளித்தது என்றும் கூறினார்.

திரு. ஈ. அருணாசலம், பண்டிதர் கா. இராசையா, திரு. ஆலாலசுந்தரம், திரு. ஆ. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org